**சார்பு நீதிமன்றம், ஓமலூர்.**
**MCOP.88/2023**

நாள். 06.03.2025

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 06.03.2025 ம் நாளாகிய இன்று திருமதி.மோகனவள்ளி, Gr-II பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி: | : எ.ம.சா.1 | | |
| பெயர் | : அபிராமி | தொழில் | : |
| த/பெ. | : | | |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**முதல் விசாரணை**

நான் மோட்டார் வாகன பகுதி அலுவலகம் ஓமலுர்-ல் தட்டச்சராக பணி புரிகிறேன். **MCOP.** 88/2023 ல் வாகன எண் டிஎன் 30சிஒய் 9816 ன் ஓட்டுனர் வினோத்குமார் த/பெ கோவிந்தன் என்பவருடைய உரிமம் வழங்கப்பட்டுள்ளதா என சாட்சியம் அளிக்க அனுமதி அளித்ததின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் மேற்படி அனுமதி கடிதம் எ.ம.சா.ஆ.1 மேற்படி அனுமதி கடிதத்திலேயே அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள வினோத்குமார் த/பெ. கோவிந்தன் , க. எண் 360, பழைய காலனி, பொம்மியம்பட்டி ஓமலுர் வட்டம், சேலம் மாவட்டம் என்பவருக்கு ஓட்டுனர் உரிமம் வழங்கப்பட்டுள்ளதா என கேட்கப்பட்டதில் மேற்படி மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை இத்துடன் தாக்கல் செய்கிறேன். மேற்படி மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையில் மேற்படி நபருக்கு மோட்டார் வாகன உரிமம் வாகன ஆய்வின் போது அளிக்கப்படவில்லை. மேலும் அதற்காக அவர் இ- சலான் அபராதம் கட்டியுள்ளார். மேற்படி மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை எ.மசா.ஆ2 .

**குறுக்கு விசாரணை:-**

மேற்படி விபத்து சம்மந்தப்பட்ட வாகனத்தை யார் முன்னிலையில் யாரால் ஆஜர்படுத்தப்பட்ட விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி வாகனத்தின் ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது என்றும் அவர் மருத்துவ சிக்கையில் இருந்தது போது வேறு நபர் வாகனத்தை ஒப்படைத்தாதால் உரிமம் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுனருக்கு உரிமம் இல்லை என்ற முடிவுக்கு வர முடியாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை.

ஒப்பம்/- எ.ம.சா.1

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்